ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்யதர்மம்.

येनाकारि मृणाळपत्रमशनं क्रीडा करिण्या सह
स्वच्छन्दं भ्रमणं च कन्दरगणे पीतं पयोनैर्झरम् ।
सोऽयं वन्यकरी नरेषु पतितः पुष्णाति देहं तृणैः
यद्दैवेन ललाटपट्टलिखितं तत्प्रोज्झितुं कः क्षमः ॥ सुभाषिते ।

𑌯𑍇𑌨𑌾𑌕𑌾𑌰𑌿 𑌮𑍃𑌣𑌾𑌳𑌪𑌤𑍍𑌰𑌮𑌶𑌨𑌂 𑌕𑍍𑌰𑍀𑌡𑌾 𑌕𑌰𑌿𑌣𑍍𑌯𑌾 𑌸𑌹
𑌸𑍍𑌵𑌚𑍍𑌛𑌨𑍍𑌦𑌂 𑌭𑍍𑌰𑌮𑌣𑌂 𑌚 𑌕𑌨𑍍𑌦𑌰𑌗𑌣𑍇 𑌪𑍀𑌤𑌂 𑌪𑌯𑍋𑌨𑍈𑌰𑍍𑌝𑌰𑌮𑍍 ।
𑌸𑍋𑌽𑌯𑌂 𑌵𑌨𑍍𑌯𑌕𑌰𑍀 𑌨𑌰𑍇𑌷𑍁 𑌪𑌤𑌿𑌤𑌃 𑌪𑍁𑌷𑍍𑌣𑌾𑌤𑌿 𑌦𑍇𑌹𑌂 𑌤𑍃
𑌣𑍈𑌃 𑌯𑌦𑍍𑌦𑍈𑌵𑍇𑌨 𑌲𑌲𑌾𑌟𑌪𑌟𑍍𑌟𑌲𑌿𑌖𑌿𑌤𑌂 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑍋𑌜𑍍𑌝𑌿𑌤𑍁𑌂 𑌕𑌃
𑌕𑍍𑌷𑌮𑌃 । 𑌸𑍁𑌭𑌾𑌷𑌿𑌤𑍇 ।

யாதொரு யானையால் மிருதுவாயும் ருசியுள்ளதுமான தாமரை இலைகள் உண்ணப்பட்டதோ பெண்யானைகளுடன் கூட சுகமாகக் கிரீடை செய்யப்பட்டதோ யாதொரு யானையால் ஆங்காங்குள்ள மலைகளின் குகைகளில் தன்னிஷ்டப்படி சுத்தப்பட்டதோ யாதொன்றால் மிகவும் சுத்தமான மலையருவி ஜலமானது அருந்தப்பட்டதோ இவ்விதம் தன்னிஷ்டப்படியெல்லாம் ஸௌக்கியமாயிருந்த காட்டுயானையானது மனிதர்களிடத்தில் அகப்பட்டுக்கொண்டு காய்ந்த புல்லுகளால் தன் சரீரத்தைப் பாதுகார்க்கின்றது. தெய்வத்தால் பலகைபோல் விசாலமாயிருக்கும் நெற்றியில் எவ்விதம் எழுதப்பட்டிருக்கின்றதோ அவ்விதம் அனுபவிக்காமலிருப்பதற்கு யாரால்தான் முடியும்?

யாராயிருந்தாலும் தம் சக்தியால் தம்மிஷ்டப்படி சுகித்திருப்பதற்கு வேண்டிய ஸௌகர்யங்களைச் செய்துகொள்ள முடியுமென்கிற அகங்காரத்தை அடையமுடியாது. பின்னே, அவரவர்களின் முற்பிறவியிலுள்ள கர்மாவை யனுஸரித்து பகவானால் எந்தெந்த ஸமயம் எப்படியெப்படி இருக்கும்படி கட்டளையிடப்பட்டிருக்கின்றதோ அவ்விதம் இருந்தே தீரவேண்டும். துக்கங்களை அனுபவிக்கும்படி நேர்ந்தாலும் அனுபவித்தே தீரவேண்டும். ஆகையால் இப்பொழுது அனுபவிக்கும் கஷ்டங்களுக்குக் காரணமாய் முன் கெட்ட கர்மாக்களைச் செய்ததுபோல் இனியும் செய்யாமல் புண்ய கர்மாக்களைச் செய்தால் சுகித்திருக்கலாம் என்று அறிவிக்கப்படுகின்றது.

உபபத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.
பிரபவ-ஸூ கார்த்திகை-மீ ௨௰௨

# துளஸி மஹிமை.

इति स्तुवन्तस्ते देवा ज्योतिर्मण्डलमास्थितम् ।
ददृशुर्गगने तत्र ज्वालाव्याप्तदिगन्तरम् ।
तत्रत्यां भारतीं सर्वे शुश्रुवुर्व्योमचारिणीम् ॥

𑌇𑌤𑌿 𑌸𑍍𑌤𑍁𑌵𑌨𑍍𑌤𑌸𑍍𑌤𑍇 𑌦𑍇𑌵𑌾 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌰𑍍𑌮𑌣𑍍𑌡𑌲𑌮𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍 ।
𑌦𑌦𑍃𑌶𑍁𑌰𑍍𑌗𑌗𑌨𑍇 𑌤𑌤𑍍𑌰 𑌜𑍍𑌵𑌾𑌲𑌾𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌦𑌿𑌗𑌨𑍍𑌤𑌰𑌮𑍍 ।
𑌤𑌤𑍍𑌰𑌤𑍍𑌯𑌾𑌂 𑌭𑌾𑌰𑌤𑍀𑌂 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌶𑍁𑌶𑍍𑌰𑍁𑌵𑍁𑌰𑍍𑌵𑍍𑌯𑍋𑌮𑌚𑌾𑌰𑌿𑌣𑍀𑌮𑍍 ॥

நாரத மஹர்ஷி பிருதுமஹாராஜாவுக்கு அறிவிக்கிறார்:-ஸகலதேவதைகளும் தங்களுக்கு ஒரு கார்யம் ஸித்திக்கவேண்டி ஸ்ரீபராசக்தியைப் போற்றுங்கால் ஆகாயத்தில் உலகெங்கும் பிரகாசிக்கும் தேஜோமண்டலத்தைக் கண்டார்கள். அதில்பின்வருமாறு அங்கு தோன்றிய ஆகாசவாணியையும் செவியுற்றனர்.

अहमेव त्रिधा भिन्ना तिष्ठामि त्रिविधैर्गुणैः ।
गौरी लक्ष्मीरिराचेति तमस्सत्वरजोगुणैः ।
तत्र गच्छथ वः कार्यं सिद्धं स्यादेव तत्सुराः ॥

𑌅𑌹𑌮𑍇𑌵 𑌤𑍍𑌰𑌿𑌧𑌾 𑌭𑌿𑌨𑍍𑌨𑌾 𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌮𑌿 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑍈𑌰𑍍𑌗𑍁𑌣𑍈𑌃 ।
𑌗𑍌𑌰𑍀 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌰𑌿𑌰𑌾𑌚𑍇𑌤𑌿 𑌤𑌮𑌸𑍍𑌸𑌤𑍍𑌵𑌰𑌜𑍋𑌗𑍁𑌣𑍈𑌃 ।
𑌤𑌤𑍍𑌰 𑌗𑌚𑍍𑌛𑌥 𑌵𑌃 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌸𑌿𑌦𑍍𑌧𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑍇𑌵 𑌤𑌤𑍍𑌸𑍁𑌰𑌾𑌃 ॥

தேவதைகளால் பிரார்த்திக்கப்பட்ட சக்தியானவள் ஸத்வம், ரஜஸ், தமஸ், என்கிற மூன்று விதகுணங்களால் நான்தான் கௌரீ லக்ஷ்மி இரா என்கிற மூன்றுவித பேதத்தை அடைந்திருக்கிறேன். ஹே தேவர்களே! அங்கு செல்லுங்கள் உங்களுக்கு கார்யஸித்தி உண்டாகுமென்று பராசக்தி ஆக்ஞை ஏற்பட்டது.

ततस्सर्वेऽपि ते देवा गत्वा तद्वाक्यबोधिताः ।
गौरीं लक्ष्मीं गिरां चैव प्रणेमुर्भक्तिसंयुताः ॥

ததஸ்ஸர்வேऽபி தே தேவா கத்வா தத்வாக்யபோதிதா: ।
கௌரீம் லக்ஷ்மீம் கிராம் சைவ ப்ரணேமுர்பக்திஸம்யுதா: ॥

அதற்குப் பிறகு ஸகல தேவர்களும் பராசக்தியின் வாக்கியத்தா லறிவிக்கப்பட்டவர்களாய்க்கொண்டு மிகவும் பக்தியுடன் கௌரீ முதலான மூன்று பேர்களையும் வந்தனம் செய்தார்கள்.

तानागतान् सुरान्दृष्ट्वा प्रणतान् भक्तवत्सलाः ।
बीजानि प्रददुस्तेभ्यः वाक्यान्यूचुस्तदा सुरान् ॥
इमानि तत्र बीजानि विष्णुर्यत्रावतिष्ठति ।
निवपन्तस्ततः कार्यं भवतां सिद्धिमेष्यति ॥

தாநாகதாந் ஸுராந் த்ருஷ்ட்வா ப்ரணதாந் பக்தவத்ஸலா: ।
பீஜாநி ப்ரததுஸ்தேப்ய: வாக்யாந்யூசுஸ்ததா ஸுராந் ॥
இமாநி தத்ர பீஜாநி விஷ்ணுர்யத்ராவதிஷ்டதி ।
நிவபந்தஸ்தத: கார்யம் பவதாம் ஸித்திமேஷ்யதி ॥

கௌரீ முதலானவர்கள் தங்களிடம் வந்து நமஸ்கரித்த பக்தியுடன் நிற்கும் தேவதைகளைப் பார்த்து அவர்களிடம் ப்ரீதியுடன் சில விதைகளைக் கொடுத்து இந்த விதைகளை ஸ்ரீ விஷ்ணு எந்த இடத்தில் இருக்கின்றாரோ அவ்விடத்தில் விதைத்தால் உங்கள் காரியம் ஸித்திக்கும் என்று சொன்னார்கள். தேவர்களும் அதை வாங்கிக்கொண்டு ஸந்தோஷத்துடன் விஷ்ணு இருக்குமிடத்தில் விதைத்தார்கள். அதிலிருந்தும்

गौरी भवात्तु तुलसी तमस्सत्वरजोगुणा ।

கௌரீ பவாத்து துலஸீ தமஸ்ஸத்வரஜோகுணா ।

ஸ்ரீ பார்வதியின் அம்சமாக ஸத்வம், ரஜஸ் தமஸ் என்கிற மூன்று குணங்களோடும் கூடிய துளஸி உண்டாயிற்று. அதைப் பார்த்து விஷ்ணு மிகவும் சந்தோஷத்துடன் அதை எடுத்துக்கொண்டு வைகுண்டம் சென்றார். விஷ்ணுவுக்கு துளஸியிடம் அதிகமான ப்ரீதியுண்டு. துளஸியின் அடியில் ஸ்ரீ விஷ்ணுவைப் பூஜித்தால் விசேஷமான சிரேயஸ்ஸுண்டாகும். பின்னும்

तुलसीकाननं राजन गृहे यस्यावतिष्ठते ।
तं गृहं तीर्थभूतं तु न यान्ति यमकिङ्कराः ॥

துலஸீகாநநம் ராஜந் க்ருஹே யஸ்யாவதிஷ்டதே ।
தம் க்ருஹம் தீர்த்தபூதம் து ந யாந்தி யமகிங்கரா: ॥

எந்த கிருகத்தில் துளஸி வநமிருக்கின்றதோ ஹே அரசனே மிகவும் பரிசுத்தமான அந்த கிருகத்தில் யமகிங்கரர்கள் வர மாட்டார்கள்.

सर्वपापहरं पुण्यं कामदं तुलसीवनम् ।
रोपयन्ति तदा भक्त्या ये ते पश्यन्ति नान्तकम् ॥

ஸர்வபாபஹரம் புண்யம் காமதம் துலஸீவநம் ।
ரோபயந்தி ததா பக்த்யா யே தே பஶ்யந்தி நாந்தகம் ॥

ஸகல பாபங்களையும் போக்கும் சக்திபெற்றதும் மிகவும் புண்யமாயும் ஸகலேஷ்டங்களையுமளிக்கக் கூடியதுமான துளஸிவநத்தை எவர்கள் பக்தியால் உண்டுபண்ணுகிறார்களோ அவர்கள் அந்தகனென்கிற யமனைப் பார்க்கமாட்டார்கள்.

दर्शनं नर्मदायास्तु गङ्गास्नानं तथैव च ।
तुलसीवनसम्पर्कं सममेतदिति स्मृतम् ॥

தர்சநம் நர்மதாயாஸ்து கங்காஸ்நாநம் ததைவ ச ।
துலஸீவநஸம்பர்க்கம் ஸமமேததிதி ஸ்ம்ருதம் ॥

நர்மதா நதியின் தர்சனம் கங்கையில் ஸ்நாநம் செய்வது துளஸீவநத்தின் ஸம்பந்தம் இம்மூன்றும் ஸமானமான பலத்தைக் கொடுக்கும்.

रोपणात्पालनात्सेकाद्दर्शनात्स्पर्शनान्नृणाम् ।
तुलसी हरते पापं वाङ्मनः कायसम्भवम् ॥

ரோபணாத்பாலநாத்ஸேகாத்தர்சநாத்ஸ்பர்சநாந்ந்ருணாம் ।
துலஸீ ஹரதே பாபம் வாங்மந: காயஸம்பவம் ॥

துளஸியை உண்டுபண்ணுவதாலும் காப்பாற்றுவதாலும் அதற்கு ஜலம் விடுவதாலும் அதைத் தர்சிப்பதாலும் அதைத் தொடுவதாலும் வாக்கு மனம் சரீரம் என்கிற இம் மூன்றுகளால் செய்யப்பட்ட பாபங்களைப் போகும்படி செய்கின்றது.

तुलसीमञ्जरीभिर्यः कुर्याद्धरिहरार्चनम् ।
न स गर्भगृहं याति मुक्तिभागी न संशयः ॥

തുലസീമഞ്ജരീഭിര്യഃ കുര്യാദ്ധരിഹരാര്ചനമ് ।
ന സ ഗര്ഭഗൃഹം യാതി മുക്തിഭാഗീ ന സംശയഃ ॥

எவன் துளஸியின் பூங்கொத்துக்களால் ஸ்ரீமஹாவிஷ்ணுவையோ அல்லது பரமேசுவரனையோ பூஜிக்கிருனே அவன் முக்தியையடைகிருன். மறுபடியும் கர்பவாஸத்தை அடையமாட்டான். இது உண்மையே.

पुष्कराद्यानि तीर्थानि गङ्गाद्यास्सरितस्सदा ।
वासुदेवादयो देवा स्तिष्ठन्ति तुलसीदळे ॥

പുഷ്കരാദ്യാനി തീര്ഥാനി ഗങ്ഗാദ്യാസ്സരിതസ്സദാ ।
വാസുദേവാദയോ ദേവാ സ്തിഷ്ഠന്തി തുലസീദളേ ॥

புஷ்கரம் கங்கை முதலான புண்யதீர்த்தங்களென்ன விஷ்ணு முதலான தேவதைகளென்ன இவர்களெல்லாரும் துளஸீதளத்தில் எப்பொழுதும் வஸித்துக்கொண்டிருக்கிருர்கள்.

तुलसीमञ्जरीमूर्धा यस्तु प्राणान्विमुञ्चति ।
यमोऽपि नेक्षितुं शक्तः युक्तः पापशतैरपि ॥

തുലസീമഞ്ജരീമൂര്ധ്നാ യസ്തു പ്രാണാന്വിമുഞ്ചതി ।
യമോഽപി നേക്ഷിതും ശക്തഃ യുക്തഃ പാപശതൈരപി ॥

துளசியின் பூங்கொத்தைத் தன் சிரஸில் தரித்துக்கொண்டு எவன் பிராணனை விடுகிருனே அவன் அநேக பாபங்கள் செய்திருந்தாலும் அவனை யமன் பார்க்கமுடியாது. அதாவது வைகுண்டத்தை அடைகிருன் என்று கருத்து.

तुलसीकाष्ठजं यस्तु चन्दनं धारयेन्नरः ।
तद्देहं न स्पृशेत्पापं क्रियमाणमपि स्वयम् ॥

തുലസീകാഷ്ഠജം യസ്തു ചന്ദനം ധാരയേന്നരഃ ।
തദ്ദേഹം ന സ്പൃശേത്പാപം ക്രിയമാണമപി സ്വയമ് ॥

துளஸிக்கட்டையால் அறைக்கப்பட்ட சந்தனத்தை எவன் தரிக்கிருனே அந்த சரீரத்தில் அவன் பாபம் செய்தாலும் அது ஸம்பந்தப்படமாட்டாது.

तुळसीपत्रकच्छाया यत्र यत्र प्रवर्तते ।
तत्र श्राद्धं प्रकर्तव्यं पितॄणां दत्तमक्षयम् ॥

துலஸீபத்ரகச்சாயா யத்ர யத்ர ப்ரவர்த்ததே ।
தத்ர ச்ராத்தம் ப்ரகர்த்தவ்யம் பித்ரூணாம் தத்தமக்ஷயம் ॥

துளஸீதளங்களுடைய நிழலானது எங்கெந்தவிடங்களில் பிரவேசிக்கின்றதோ அங்கு சிராத்தம் செய்யவேண்டும். அதினுல் பிதுர்க்களுக்கு அதிகமான திருப்தி எற்படும் என்று பாத்மபுராணத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

துளஸீவிஷயமாய் இன்னும் பல வசனங்களிருந்தபோதிலும் பக்திமான்களுக்கு இம்மட்டோடு போதுமென்று நிறுத்திக் கொண்டு இதுவிஷயமாய் புராணத்தில் கூறப்பட்ட ஒரு சிறு கதையுண்டு அதையும் ஸங்கிரகமாக நிரூபித்து இதை முடித்துக் கொள்ளுகிறோம். (தொடரும்)

உபபத்திராதிபர்.

---

# கீதசுந்திரம்.

ஜயதேவ கவியால் இயற்றப்பட்ட கீத கோவிந்தம் எனும் அஷ்டபதியை ஸங்கீத ஞானமுள்ளவர்களில் அறியாதார் இலர். அக்கிரந்தம் கிருஷ்ணபரமாயும், ஸ்ரீமந் நாராயணனுடைய அவதார வைபவங்களையும், கோபிகைகளுடைய விரஹாவஸ்தையையும் மற்றும் விஷ்ணுவின் சரிதங்களையும் கூறுவதாய் இருக்கிறது.

இதைக் கண்ணுற்று சுமார் 300 வருடங்களுக்கு முன்னிருந்த ஸதாசிவ தீக்ஷிதர் என்பார் கீதஸுந்திரமென்று ஓர் அஷ்டபதியை இயற்றியுள்ளார். ஷை ஸதாசிவ தீக்ஷிதர் தஞ்சை போஸலவம்சத்து அரசர்களில் துலஜாமஹாராஜாவினிடம் மந்திரிஎன்றும்ஜாநகீபரிணய நாடகம் எழுதின ராமபத்திரதீக்ஷிதரின் மாமனுராகிய சொக்கநாத தீக்ஷிதரின் சிஷ்யர் என்றும் சிவபக்தாக்ரேஸரென்றும் தெரியவருகிறது. ஏனெனில் இவருடைய கீதஸுந்திரத்தில் ஆரம்பம் அஷ்டபதங்கள் ராகம், தாளம், சுலோகம், அஷ்டபதி முதலியவைகள் கீதகோவிந்தத்தையே ஒத்திருந்தாலும் உள்ளடங்கிய அர்த்தங்கள், விஷயங்கள் மதுரைமா நகரில் திருக்கோயில்கொண்டு தேவியுடன் ஆன்மகோடிகள்

உய்யுமாறு திருவிளையாடல்கள் அறுபத்துநாலும் புரிந்த மீனாக்ஷிஸுந்தரேச்வரரைப் பொருத்திருக்கிறது. இதை ஸங்கீதஸாஹித்ய ஞானமுள்ளவர்கள் ஆவர்த்தி செய்வரேல் ஆனந்தக்கடலில் மூழ்கி அமுதத்தையும் விரும்பார் என்பது அனுபவ சித்தமாகும். ஆகையால் சிவநேசச் செல்வர்காள் இக்கிரந்தத்தால் முக்கிய பயனை யடைவார்களென்பது நிச்சயம். சுபம்.

* "கிருஹ்யக்ஞ" வி. உமாமகேச்வர சாஸ்திரி.

---

# தசாவதார காலங்கள்.

காலத்தின் கோலமாய் ஒவ்வோர் வகுப்பாரும் தம்தம் இஷ்டமானவர்களின் பிறந்த நாளை விசேஷ வைபவத்துடன் பணச் செலவுடன் கொண்டாடி உத்ஸாகமாய் காலங்கழிக்கின்றனர். அவற்றுள் இவ்வருஷம "சிவாஜி ஜயந்தி" என்று மஹாராஷ்டர்கள் கொண்டாடினதையும் அதில நடந்த மனத்தின் வேறுபாடுகளையும் பத்திரிகையின் மூலமாய் அறிகிறோம். இதேமாதிரி "திலகர் ஜயந்தி, கௌரோஜி பிறந்தநாள்" முதலியவைகளின் கொண்டாட்டமும் அடிககடி கேள்விப்படுகிறோம். ஆனால் இவைகளை விட்டுவிடுமபடிக்கும் இவைகள் கெடுதலுள்ளவையென்றும் கூற முன்வரவில்லை.

இவைகளைக் காட்டிலும் சிறந்ததாயும் அதிக பணச் செலவில்லாததாயும் வகுப்புத்வேஷம் உண்டுபண்ணாததாயும் இரண்டுலகிலும் சுகம்கொடுக்கககூடியதாயும் அநேகமாய நம்மால் அறியாததாயும் அநுஷ்டிப்பதால்விசேஷசுகிருதமுள்ளதாயுமிருக்கிறபகவானுடைய அநேக அவதாரதினங்களினகொண்டாட்டம்எங்கியிருக்க அவைகளைச்சற்றுங் கவனியாமல்நேற்றுத்தோன்றி மறைந்தவர்களின் ஜனமதினத்துககுஆயிரக்கணக்காய்ச்செலவிடுவது விந்தையே

ஈச்வரனுடைய அவதாரங்களில் பிரஸித்தியாயிருப்பது 10-உருவங்களே. அவற்றுள் பூர்ணாவதாரங்களான ஸ்ரீராம கிருஷ்ண

---

* மேற்கண்ட பட்டம் சென்ற ஆனி-மீ ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீமடத்தில் நடந்த தர்மஸதஸ்ஸில் மஹாஸன்னிதானத்தின் அனுக்கிரஹத்தால் கிடைக்கப்பெற்றது என்பதைத் தெரிவிக்கவேண்டியதாயிருக்கிறது.

மூர்த்திகளின் ஜன்மதினங்களையே பெரும்பாலும் உலகில் அறிந்திருப்பார் பலர். மற்ற அவதாரங்கள் தெரிந்திருந்தாலும் அந்த தினங்களை அறிந்தோர் சிலரே யாவர் பற்றி தசாவதார காலங்களை நமது பத்திரிகையின் வாயிலாக என் சிற்றறிவிற்கெட்டியவரை எழுதுகிறேன்.

தசாவதாரங்களாவன:—

**वनजौ वनजौ ह्रस्वः त्रिरामाः कृष्णकल्किनौ । मत्स्यः कूर्मः ।**

வநஜௌ வநஜௌ ஹ்ரஸ்வ: த்ரிராமா: க்ருஷ்ணகல்கிநௌ । மத்ஸ்ய: கூர்ம: ।

என்கிற ச்லோகத்துக்கு பதிலாக கவி ராக்ஷஸன் எனும் கவியால் மேற்கண்ட வநஜௌ என்கிற ச்லோகம் சுருக்கமாய்க்கூறப்பட்டதாக பெரியோர் கூற்று. மத்ஸ்யமும கூர்மமும் ஜலத்தில் இருப்பதால் வநஜௌ எனறும் வாராஹமும் ஸிம்மமும் காட்டில் இருப்பதால் மறுபடியும் வநஜௌ என்றும மற்றவைகள் முறையே வாமன, பரசுராம, தசரத ராம, பலராம, கிருஷ்ண கல்கி, அவதாரங்களைத் தெரிவிக்கின்றது. மேற்கண்ட அவதார தினங்களில் உபவாஸமிருந்து பகவானை ஆச்சிதது இயன்றவளவு தானம் செய்து நாமஸ்மரணை பண்ணி மறுநாள் பாரணை செய்வதே அவரவர் சரீரம் படைத்ததின் முகய பயனாகும். பிரத்யக்ஷமாய் அநேக வியாதிகளுககு பட்டினியிருப்பதே தகுந்த சிகித்ஸையாய் வைதயமுறையில கேள்விப்படுகிறோம. பிராயச்சித்த கிரந்தங்களில உபவாஸமும், ஸ்நாநமும அநேகமாய்க கூறியிருப்பதைப பலவிடங்களில காணலாம. பட்டினியால மனஸ்ஸின் விகாரம் அடங்குவதை நேரில் அறியலாம். லௌகிகமான லாபத்தைப்பற்றி எழுதவேண்டியதில்லை. பரத்தில் பயனளிப்பதை ஆஸ்திகர்களுககுச் சொல்லவேண்டியதில்லை.

இம்மாதிரி இருவகைப்பிரயோஜனமுள்ள அவதாரகாலங்களைக் கொண்டாடவேண்டியது உண்மை இந்துவின் உரிமைத் தொழில்.

மத்ஸ்யாவதாரம்.

**चैत्रे मास्यसिते पक्षे त्रयोदश्यां तिथौ विभुः ।**
**उदभून्मत्स्यरूपेण रक्षार्थमवनेर्हरिः ॥**

சைத்ரே மாஸ்யஸிதே பக்ஷே த்ரயோதச்யாம் திதௌ விபு: ।
உதபூந்மத்ஸ்யரூபேண ரக்ஷார்த்தமவநேர்ஹரி: ॥

சைத்திரமாஸம் கிருஷ்ணபக்ஷம் திரயோதசியில் மத்ஸ்யாவதாரம் புரிந்தார். நாராயணன் व्रते चान्द्रमसं शस्तं வ்ருதெ சாந்த்ரமஸம் ஶஸ்தம் விருதானுஷ்டானங்களுக்கு சாந்திரமானமே விசேஷமானது. அதாவது சூரியன் மேஷம் முதலான ராசிகளில் இருக்கும்பொழுது எந்த அமாவாஸை நடைபெறுகிறதோ அன்றுவரை சைத்ரம், வைசாகம் முதலான மாஸங்களாகக் கொள்ளவேண்டியது. அந்த அமாவாஸைக்கு முந்தின பௌர்ணமியில் மாஸப் பெயருக்குற்ற நக்ஷத்திரங்களான சித்திரை, விசாகம், கேட்டை, முதலியவைகளும் அநேகமாய்க் கூடலாம் இல்லாவிடினும் தோஷமில்லை. இவ்விதமான சாந்திரமான மாதங்களே எல்லா விருதங்களிலும் கண்டுகொள்ளவேண்டும்.

கூர்மாவதாரம்.

ज्येष्ठमासे तथा कृष्णद्वादश्यां भगवानजः ।
मन्दरं पृष्ठतः कृत्वा कूर्मरूपी हरिर्दधौ ॥

ஜ்யேஷ்ட்ட₂மாஸே தத₂ா க்ருஷ்ணத்₃வாத₃ஶ்யாம் ப₄க₃வாநஜ: ।
மந்த₃ரம் ப்ருஷ்ட₂த: க்ருத்வா கூர்மரூபீ ஹரிர்த₃தௌ₄ ॥

ஜேஷ்டமாஸம் கிருஷ்ணபக்ஷ துவாதசியில் கூர்மாவதாரம் செய்து பகவான் மந்தரபர்வதத்தை முதுகில் சுமந்தார்.

வராஹாவதாரம்.

चैत्रे कृष्णे तु पञ्चम्यां जज्ञे नारायणः स्वयम् ।
भुवं वराहरूपेण शृङ्गाभ्यामुदधेर्जलात् ॥

சைத்ரே க்ருஷ்ணே து பஞ்சம்யாம் ஜஜ்ஞே நாராயண: ஸ்வயம் ।
பு₄வம் வராஹரூபேண ஶ்ருங்கா₃ப்₄யாமுத₃தே₄ர்ஜலாத் ॥

சைத்ர கிருஷ்ண பஞ்சமியில் வராஹாவதாரம் புரிந்து நாராயணன் சமுத்திரத்தில் மூழ்கியிருந்த பூமியை தன் இரு கோரைப்பற்களால் தூக்குகிறார்.

நரஸிம்மாவதாரம்.

वैशाखे शुक्लपक्षे तु चतुर्दश्यामिनेऽस्तगे ।
उद्भूवासुरद्वेषी नृसिंहो भक्तवत्सलः ॥

வைஶாகே₂ ஶுக்லபக்ஷே து சதுர்த₃ஶ்யாமிநேऽஸ்தகே₃ ।
உத்₃ப₄ூவாஸுரத்₃வேஷீ ந்ருஸிம்ஹோ ப₄க்தவத்ஸல: ॥

R01-93 654 654-724



வைகாச சுக்ல சதுர்தசியில் சூரியன் அஸ்தமிக்குந்தருவாயில் அஸுரர்களுக்கு த்வேஷியாக நரஸிம்மனாக பக்தவத்ஸலனான பரமன் ஆவிர்பவித்தார்.

### வாமனாவதாரம்.

मासि भाद्रपदे शुक्लद्वादश्यां वामनो विभुः ।
अदित्यां कश्यपाज्जज्ञे नियन्तुं बलिमोजसा ॥

𑌮𑌾𑌸𑌿 𑌭𑌾𑌦𑍍𑌰𑌪𑌦𑍇 𑌶𑍁𑌕𑍍𑌲𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑍍𑌯𑌾𑌂 𑌵𑌾𑌮𑌨𑍋 𑌵𑌿𑌭𑍁𑌃 ।
𑌅𑌦𑌿𑌤𑍍𑌯𑌾𑌂 𑌕𑌶𑍍𑌯𑌪𑌾𑌜𑍍𑌜𑌜𑍍𑌞𑍇 𑌨𑌿𑌯𑌨𑍍𑌤𑍁𑌂 𑌬𑌲𑌿𑌮𑍋𑌜𑌸𑌾 ॥

பாத்ரபதமாஸ சுகல துவாதசியில் பலிச்சக்ரவர்த்தியை அடக்குவதற்காக அதிதிதேவியினிடம் வாமனாவதாரம் செய்தார்.

### பரசுராமாவதாரம்.

मार्गशीर्षे द्वितीयायां कृष्णपक्षे तु भार्गवः ।
दुष्टक्षत्रियविद्द्वेषी रामोऽभूत्तापसाग्रणीः ॥

𑌮𑌾𑌰𑍍𑌗𑌶𑍀𑌰𑍍𑌷𑍇 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌾𑌯𑌾𑌂 𑌕𑍃𑌷𑍍𑌣𑌪𑌕𑍍𑌷𑍇 𑌤𑍁 𑌭𑌾𑌰𑍍𑌗𑌵𑌃 ।
𑌦𑍁𑌷𑍍𑌟𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌵𑌿𑌦𑍍𑌦𑍍𑌵𑍇𑌷𑍀 𑌰𑌾𑌮𑍋𑌽𑌭𑍂𑌤𑍍𑌤𑌾𑌪𑌸𑌾𑌗𑍍𑌰𑌣𑍀𑌃 ॥

மார்கசிர்ஷமாஸம் கிருஷ்ணபக்ஷம் த்விதீயையில் பிருகுமஹர்ஷிக்குப் புத்திரனாக துஷ்ட க்ஷத்திரியர்களை நாசஞ்செய்வதற்காகப் பரசுராமனாக அவதரித்தார்.

### ஸ்ரீ ராமாவதாரம்.

चैत्रशुक्लनवम्यां तु मध्याह्ने रघुनन्दनः ।
दशाननवधाकांक्षी जज्ञे रामः स्वयं हरिः ॥

𑌚𑍈𑌤𑍍𑌰𑌶𑍁𑌕𑍍𑌲𑌨𑌵𑌮𑍍𑌯𑌾𑌂 𑌤𑍁 𑌮𑌧𑍍𑌯𑌾𑌹𑍍𑌨𑍇 𑌰𑌘𑍁𑌨𑌨𑍍𑌦𑌨𑌃 ।
𑌦𑌶𑌾𑌨𑌨𑌵𑌧𑌾𑌕𑌾𑌂𑌕𑍍𑌷𑍀 𑌜𑌜𑍍𑌞𑍇 𑌰𑌾𑌮𑌃 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌹𑌰𑌿𑌃 ॥

சைத்திரமாஸம் சுக்ல நவமியில் மத்யான காலத்தில் ராவண ஸம்ஹாரத்துக்காக கௌஸல்யாதேவியினிடத்தில் ரகுநாதனாக அவதரித்தார்.

### பலராமாவதாரம்.

वैशाखे शुक्लपक्षे तु तृतीयायां हलायुधः ।
सङ्कर्षणो बलो जज्ञे रामः कृष्णाग्रजो हरिः ॥

𑌵𑍈𑌶𑌾𑌖𑍇 𑌶𑍁𑌕𑍍𑌲𑌪𑌕𑍍𑌷𑍇 𑌤𑍁 𑌤𑍃𑌤𑍀𑌯𑌾𑌯𑌾𑌂 𑌹𑌲𑌾𑌯𑍁𑌧𑌃 ।
𑌸𑌙𑍍𑌕𑌰𑍍𑌷𑌣𑍋 𑌬𑌲𑍋 𑌜𑌜𑍍𑌞𑍇 𑌰𑌾𑌮𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌗𑍍𑌰𑌜𑍋 𑌹𑌰𑌿𑌃 ॥

வைசாக சுக்ல திருதீயையாகிய அக்ஷயத்ருதீயை தினத்தில் கிருஷ்ணனுக்கு முந்தினவராக பலராமாவதாரம் புரிந்தார்.

**ஸ்ரீ கிருஷ்ணவதாரம்:**

**मासि तु श्रावणेऽष्टम्यां निशीथे कृष्णपक्षके ।**
**प्राजापत्यर्क्षसंयुक्ते कृष्णं देवक्यजीजनत् ॥**

𑌮𑌾𑌸𑌿 𑌤𑍁 𑌶𑍍𑌰𑌾𑌵𑌣𑍇𑌽𑌷𑍍𑌟𑌮𑍍𑌯𑌾𑌂 𑌨𑌿𑌶𑍀𑌥𑍇 𑌕𑍃𑌷𑍍𑌣𑌪𑌕𑍍𑌷𑌕𑍇 ।
𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑌰𑍍𑌕𑍍𑌷𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑍇 𑌕𑍃𑌷𑍍𑌣𑌂 𑌦𑍇𑌵𑌕𑍍𑌯𑌜𑍀𑌜𑌨𑌤𑍍 ॥

சிராவணமாஸ கிருஷ்ணாஷ்டமியில் ரோஹிணீ நக்ஷத்திரம்கூடின நடு இரவில் தேவகியினிடம் ஸ்ரீ கிருஷ்ணன் அவதாரம் செய்தார்.

**கல்கி அவதாரம்.**

**मासि भाद्रपदे शुक्लद्वितीयायां जनार्दनः ।**
**म्लेच्छाक्रान्ते कलावन्ते कल्किरूपो भविष्यति ॥**

𑌮𑌾𑌸𑌿 𑌭𑌾𑌦𑍍𑌰𑌪𑌦𑍇 𑌶𑍁𑌕𑍍𑌲𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌾𑌯𑌾𑌂 𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨𑌃 ।
𑌮𑍍𑌲𑍇𑌚𑍍𑌛𑌾𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑍇 𑌕𑌲𑌾𑌵𑌨𑍍𑌤𑍇 𑌕𑌲𑍍𑌕𑌿𑌰𑍂𑌪𑍋 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ॥

பாத்ரபதமாஸ சுக்ல த்விதீயையில் இக்கலியின் முடிவில் உலகம் முழுதும் மிலேச்சர்களால் நிறைந்திருக்கும்பொழுது கல்கிரூபமாக அவதரிக்கப்போகிறார்.

**अवतारदिने पुण्ये हरिमुद्दिश्य भक्तितः ।**
**उपवासादियत्किञ्चित् तदानन्त्याय कल्पते ॥**

𑌅𑌵𑌤𑌾𑌰𑌦𑌿𑌨𑍇 𑌪𑍁𑌣𑍍𑌯𑍇 𑌹𑌰𑌿𑌮𑍁𑌦𑍍𑌦𑌿𑌶𑍍𑌯 𑌭𑌕𑍍𑌤𑌿𑌤𑌃 ।
𑌉𑌪𑌵𑌾𑌸𑌾𑌦𑌿𑌯𑌤𑍍𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍 𑌤𑌦𑌾𑌨𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌯 𑌕𑌲𑍍𑌪𑌤𑍇 ॥

மேற்கண்ட தினங்களில் உபவாஸம் முதலியவைகள் விசேஷ பயன் தரும் என்று முன்னமேயே சொல்லப்பட்டது.

கிருஹ்யக்ஞ, வி. உமாமகேசுவர சாஸ்திரி.

---

வர்ணாச்ரம தர்ம கான்பரன்ஸ்

## வரவேற்புச் சங்கம்.

மேற்படி சங்கத்தை கிறிஸ்ட்மஸ் டயத்தில் நடத்துவதற்காக 4—12—27ல் கங்கை கொண்டான் மண்டபத்தில்ஸ்ரீமான்

M. M. அநந்தராவ் அவர்களின் அக்ராஸனத்தின்கீழ் ஒருகூட்டம் நடைபெற்றது. அதில் அடியில் கண்ட நபர்களை மெம்பர்களாக நியமனம் செய்யப்பட்டிருக்கிறது.

மகா-ா-ா-ஸ்ரீ

1. திவான்பகதூர், T. R. ராமச்சந்திரய்யர் அவர்கள்
2. ஸ்ரீமான் கல்யாணசுந்திரம்பிள்ளை அவர்கள்
3. ஸ்ரீமான் K. சதாசிவன் செட்டியார் அவர்கள்
4. ஸ்ரீமான் T. R. வெங்கட்டராமய்யர் அவர்கள்
5. ஸ்ரீமான் ராவ்பகதூர் V. ரங்கனுதஞ்செட்டியார் அவர் [கள்
6. ஸ்ரீமான் M. M. அனந்தராவ் அவர்கள்
7. பண்டிட் ஸோமதேவசர்மா அவர்கள்
8. ஸ்ரீமான் V. பார்த்தஸாரதி அய்யங்கார் அவர்கள்
9. ஸ்ரீமான் T. S. கிருஷ்ணஸாமி அய்யங்கார் அவர்கள்
10. ஸ்ரீமான் M. A. அனந்தய்யர் அவர்கள்
11. ஸ்ரீமான் T. வரதாசாரியார் அவர்கள்
12. ஸ்ரீமான் p. V. அனுமந்தராவ் அவர்கள்
13. டாக்டர் ஆசார்யா அவர்கள்

ஷை சங்கத்துக்கு அடியில் கண்டவர்களை ஆபீஸ் பேர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறது.

1. 1922-ஹுல் தஞ்சாவூரில் ஷை சங்கத்தில் ஆர்கனைஸிங் செக்ரிடரியாக நியமனம் செய்யப்பட்ட ஸ்ரீமான் W. P. கிருஷ்ணமாசார்யார் அவர்கள் — ஆர்கனைடிங் செக்ரிடரி.

2. பண்டிட் ஸோமதேவசர்மா — செக்ரிடரி.

3. ஸ்ரீமான் W .P. கிருஷ்ணமாசார்யார் அவர்கள் ஆபீஸ் ஸம்மந்தமான கரஸ்பாண்டென்ஸ் வகையறுவும் குமாஸ்தா நியமனம் முதலானதுகளும் கவனிப்பார். ஷை சங்கத்தின் அபிவிருத்திசம்பந்தமான எல்லா கார்யங்களையும் கவனிப்பார்.

பண்டிட் ஸோமதேவசர்மா அவர்கள் பண்டித பர்ஸாத் ஸம்மந்தமான கரெஸ்பாண்டென்ஸ் வகையறுவைக் கவனிப்பார்

4. ஸ்ரீமான் M. A. அனந்தராவ — டிரஷரர்.

எல்லா மணியாடர், செக், முதலானதுகள் ஷையாருக்கு அனுப்பவேண்டும்.

இச் சங்கம் 1, 2 3&5 மெம்பர்களில் ஒருவரை பிரஸிடெண்டாகவும் மற்றொருவரை வைஸ் பிரஸிடெண்டாகவும் தேறுதல் செய்து எடுக்கப்படும். இவைகளை பேபர்களில் பிரசுரம் செய்யப் பட்டிருக்கிறது.

ஷை சங்கத்தின் தினசரி நடக்கும் விஷயங்களை தினசரி பத்திரிகைகளில் பிரசுரம் செய்யப்படும்.

மதராஸ்,
5—12—27. (S. d.) சிக்ரிடரி.

---

## அன்னையூர் பிராமணஸபையின் தீர்மானங்கள்.

பிராமணஸபா விழுப்புரம் தாலூகா அன்னையூர் 25-11-1927 வெள்ளிக்கிழமை மாலை 5மணிக்கு பிரம்மஸ்ரீ *D.* ரகுபதிசாஸ்திரிகள் அவர்கள் தலைமையின் கீழ் ஒருஸபை கூடிக்கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் தீர்மானிக்கப்பட்டன.

1. தர்மம் சீர்குலைந்தும் அதர்மம் தலை தூக்கி நிற்கும் இந்நாளில் சென்னையில் ஒரு வர்ணாச்ரம மஹாநாடு தோன்றுவதைக் கேட்டு இச்சபை மிகவும் சந்தோஷத்தை அடைகிறது.

2. இதற்கு முக்கிய கர்த்தாவான பிரும்மஸ்ரீ ஸ்ரீவத்ஸ ஸோமதேவசர்மா அவர்களுடைய உழைப்பும் ஊக்கமும்பலப்ராப்த்தியாகுமாறு எல்லாம் வல்ல இறைவனைபிரார்த்திக்கிறது.

3. சென்னையில் கூடும் வர்ணாச்ரமமஹாநாட்டிற்கு இந்த ஸபா ஸ்ரீ வி. ரமநாதய்யர் அவர்களையும் பிரம்மஸ்ரீ ல. ராமச்சந்திர சாஸ்திரிகள் அவர்களையும் பிரதிநிதிகளாக அனுப்பத் தீர்மானித்திருக்கிறது.

வி. ராமநாதய்யர்.

---

## மதப்ரசாரம்.

ஸ்ரீ ஜகத்குரு காஞ்சிகாமகோடிபீடாதிபதி ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் மடம் ஆஸ்தானவித்வானும் ஆர்யதர்மம் உபபத்திராதிபரும் மஹாமஹோபாத்யாய வேதாந்தகேஸரி காலஞ்சென்ற பிரம்மஸ்ரீ கணபதிசாஸ்திரிகளின் ஸோதரரும் சிஷ்யருமான

பிரும்மஸ்ரீ பஞ்சாபகேசசாஸ்திரிகள் சென்ற ஞாயன்று சென்னை வந்தார். அச்சமயம் ஸ்ரீ அமாகலாவிலாஸினீ ஸபையின் சார்பாக பிரம்மஸ்ரீ வெ. ஸோமதேவசர்மா அவர்கள் ரயிலடிக்கு வந்து வரவேற்றார். அன்று மாலை 4-மணிக்குத் தம்புசெட்டிவீதி ஸ்ரீ சங்கரமஹாலில் ஓர் ஸபை கூடிற்று. சர்மா அவர்கள் ஸபை சார்பாக ஸம்ஸ்கிருத சுலோகங்கள் நிறைந்த ஓர் வரவேற்புப் பத்திரம் அளித்து பிரம்மஸ்ரீ சாஸ்திரிகளின் யோக்யதைதயை சபையோர்க்கு எடுத்து விளக்கி "வர்ணதர்மம்" என்பதைப் பற்றி உபன்யஸிக்கும்படி பிரார்த்தித்தார். உபன்யாஸகர் வரவேற்புக்குத் தக்க பதில் தத்காலத்திலிபற்றிய சுலோக மூலமாகக் கூறி ஷை விஷயத்தைப்பற்றி ஒன்றரைமணி அத்புதமாக எல்லோருள்ளத்திலும் பசுமரத்தாணிபோல் பதியும்படி ஆக்ஷேபங்களுக்கு ஸமாதானங் கூறி நன்கு உபன்யஸித்தார்.

மிக்க ஆவலுடன் ஜனங்கள் குழுமி இன்னமும் கேட்க வேண்டுமென வேண்டியதால் "பக்தியோகம்" என்பதைப்பற்றி செவ்வாய்க்கிழமை அதேவிடத்தில் எல்லோருள்ளமும் பூரிக்கும்படி பல உதாஹரணங்களைக் கூறி இரண்டுமணி ஸவகாசம் ப்ரசங்கமாரி பொழிந்தார். வந்தனோபசாரமான பிறகு ப்ரஸாதமளிக்கப்பட்டது.

மாம்பலத்தில் பிராமணஸபை கோதண்டராமஸ்வாமி சபைகளின் ஆதரவில் திங்கள் இரவு 8-மணிக்கு "கர்மயோகம்" என்பதைப்பற்றி மிகச்சுவையாக இரண்டுமணி உபன்யஸித்தார். இடையிடையே கேட்ட ஸந்தேகங்களுக்குத்தக்க பதிலளித்தார் செவ்வாயன்று காலை 7-மணிக்கு முத்யால்பேட்டை பவழக்காரத்தெரு ஸ்ரீ காளஹஸ்தீச்வரர் ஆலயத்தில் சிஷ்டாசாரபரிபாலன பரிஷத்தின் மாணவர்கள் செய்யும் வேதாத்யயனம் காவ்யபாடம் முதலியவைகளைப் பார்த்து சிறுவர்களுக்கோர் சுருக்கமான உபதேசம் செய்தார். ஸ்ரீ சர்மா அவர்கள் மாணவர்களைக்கொண்டு நடத்திய ஸ்துதிபாடம் நடந்தபிறகு குலவித்யை என்பதைக்குறித்து ஒரு மணி அழகாக உபன்யஸித்தார். இப்பண்டிதரது அழகியசுலோகங்களும் யுக்திகளும் எல்லோருடைய மனதையும் ஆகர்ஷித்து ஒருமுகமாக எல்லோரும் சென்னையில் நடக்கும் வர்ணாச்ரம மஹாஸபையை நன்கு நடத்திவைக்கும்படி அவரை வேண்டினர். ஸ்ரீ ஜகத்குருஸ்வாமிகளது உத்திரவு கிடைத்தால் வருவ

தாகக் கூறினர். இதுபோல் அடிக்கடி பண்டிதர்கள் வந்து உப தேசம் செய்தால் உறங்கும் ஸபைகள் உணர்ச்சிகொண்டு எழும்.

தீ. ராமநாததீக்ஷிதன்.

---

## வர்ணாச்ரம மஹாஸபை.

ஷை ஸபைக்கு மகா-ா-ஸ்ரீ கயப்பாகம் ஸாதசிவசெட்டியாரவர்கள் உபசாணைத் தலைவராகாக தேர்ந்தெடுககப்பட்டிருக்கிறார். ஸ்ரீமான்களான பி. வி. ஸ்ரீநிவாஸய்யர், ரெவின்யூ இன்ஸ்பெகடர் முதலிய சேலம் கனவான்கள் உபசாணைச் சபையிலும் பிரும்மஸ்ரீ ராமசேஷகனபாடிகள் முதலிய கோயமபுத்தூர் கனவான்கள் பிரதிநிதி ஸபையிலும் சேர்ந்து சரியான ப்ரதிநிதித்துவங்கொண்டதாக நடத்திவைககின்றனர். ஆனதால் ஏனையோர்களும் சேர்ந்து தலைவரைத தேர்ந்தெழுதியும பிரதிநிதியாகச் சேர்ந்தும் இதை நடத்தி வைக்கப் பிரார்த்திககிறோம்.

வர்ணாச்ரமதர்மமஹாஸபை காரியதரிசி,
154-தமபுசெட்டிவீதி சென்னை'

---

## ஸநாதன மானவ தர்மம்.

### 1. ஸத்தியம்.

உலகில் உள்ள ஜீவராசிகளுள் உயர்ந்ததாயும் பகுத்தறிவுள்ளதான மானிடஜன்மம் நமக்கு இறைவனால் அளிக்கப்பட்டிருக்கிறது. அதிலும் அங்கஹீனமில்லாமலும் உயர்ந்த வர்ணமாயும் செய்யப்பட்ட நாம் அவருககு எதாவது பதில் செய்யவேண்டும். என்ன செய்யலாமென்று யோஜிக்குமளவில் நாம் நம்முடைய கடமைகளைச் சரிவர செய்துவிடுவோமாகில் அதை பதில் உபகாரமாகக்கொண்டு நமக்கு க்ஷேமத்தையே கொடுத்துவிடுவார்களென்பது திண்ணம்.

அப்படிச் செய்வோமாகில் நம்மிஷ்டப்படி சுகத்தையே அடையலாம், துக்கம் நீங்கிவிடும். அல்லாமல் எனக்கு எல்லாம் தெரியும், நேற்றிரவுதான் புராணம் கேட்டேன் என்ற விதண்டாவாதம் பயன் படாது. இதை வேடிக்கையாக ஓர் கவி சொல்லுவதாவது

काम्ं जनास्स्मयन्ते कैलासविलासवर्णनावसरे ।
साधनकथनावसरे साचीकुर्वन्ति वक्त्राणि ॥

காமம் ஜநாஸ்ஸ்மயந்தே கைலாஸவிலாஸவர்ணநாவஸரே ।
ஸாதநகதநாவஸரே ஸாசீகுர்வந்தி வக்த்ராணி ।

பகவானுடைய குணகணங்களையும் கைலாஸபர்வதத்தின் அழகையும் அவர்களுடைய லீலையையும் விஸ்தாரமாக வர்ணிக்குமளவில் ஜனங்கள் ஆஹா! பகவானுடைய லீலைகள் என்ன விநோதம் என்று ஆனந்திக்கிறார்கள், ஆனால் இம்மஹிமை வாய்ந்த பகவானை ஸேவிப்பதையும் இந்த இந்த உபாயங்களால் அவர் ப்ரீதியை ஸம்பாதிக்கலாமென்று வழிகளைக் கூறுமளவில் முகங்களைக் கீழே தொங்கும்படி செய்துகொள்கிறார்கள் என்று வேடிக்கையாகக் கூறினார். இவ்விதமில்லாமல் கார்யரூபமாகக் காட்டுவது தான் பெரியோர்களின் கடமை.

அவைகளில் அனேகம் வழியுண்டு. அதில் ஸத்யமும் ஒன்றாகும். எவரும் உண்மையே பேசவேண்டும். நமது சரீரத்தில் அமைக்கப்பட்டிருக்கும் இந்திரியங்களில் வாக்குமாத்திரம் பேசுகிற தன்மை வாய்ந்தது. அது ஏன் அப்படி இருக்கவேண்டுமெனில் பிறர்களை நிந்திப்பது பொய் சொல்லுவது முதலிய கொடிய கார்யங்களில்லாமல் கடவுளைப் போற்றுதல் வேதாத்யயனம் செய்தல் முதலிய ஸத்கார்யங்களுக்கென்று கருதவேண்டும். தன் உள்ளத்தின் கருத்தை வாக்குக்கும் மனத்திற்கும் கொஞ்சமேனும் மாறுதலிலலாதபடி பிறருககு அறிவிப்பதையே ஸத்யம் என்று கூறுவர். இதையே பிரமாண நூல்களில் சிறந்த வேதமானது நம்மை सत्यं वद । धर्मं चर ஸத்யம் வத தர்மம் சர । ஸத்யத்தை சொல். தர்மத்தைச்செய் என்று ஆக்ஞாபிக்கிறது. ஸத்யமே முதன்மையாகக் கூறப்பட்டிருக்கிறது. இதனால் உண்மையே பேசுவது சிறந்த தர்மம். ஒவ்வொருவரும் இம்முறையை தவறாது அனுஷ்டிப்பார்களேயாகில் அவர்களுககு விசேஷமாகக் கீர்த்தியும் ஐச்வர்யமும் ஆஸ்திகபுத்தியும் உதாரமான குணங்கள் முதலியவை ஏற்படுகின்றன. — தவறாக நடப்போமாகில் அநேக விதமான துன்பங்களுக்கு ஆளாகும்படி நேரிடுகின்றது.

(தொடரும்.)

கே, ஆர். வைத்தியநாதசாஸ்திரிகள்.